25-10-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : சமகால இலங்கையின் பொருளாதார வளர்ச்சி**

**தொடக்க உரையாடல் : மாணிக்கம் லோகசிங்கம்**

*இலங்கை சுதந்திரமடைந்த போது இருந்த பொருளாதார நிலையுடன் ஒப்பிடும் போது இப்போது நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. 1940களின் இறுதியிலும் 1950களிலும் அறிமுகப்படுத்தப்பட்ட சமூக நலத்திட்டங்களின் பயன்களையே மக்கள் இன்னமும் அனுபவிக்கிறார்கள்.*

*இலவசக் கல்வி, இலவச மருத்துவம் உட்பட்ட அத்தியாவசியமான வளமான எதிர்காலத்துக்கு வழிவகுக்கக் கூடிய பொருளாதார மாதிரிகளை இலங்கை கொண்டிருந்தது. அதன் உச்சக் கட்டமாக 1970களின் தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் சுயசார்பு மற்றும் தன்னிறைவுப் பொருளாதாரத்திற்கான அடிப்படைகளை இட்டன. ஆனால் 1977 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையானது சந்தை உட்பட எல்லாவற்றையும் திறந்துவிட்டு இலங்கையை பாதாளத்திற்குத் தள்ளியதோடு வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் தவறாமல் துண்டுவிழுவதை உறுதிப்படுத்தியது.*

*இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது சீரானதாகவும் திட்டமிட்டதாகவும் இல்லாமை இலங்கையை தொடர்ந்தும் பாதிக்கிறது. சுதந்திரமடைந்த தொடக்கத்தில் இலங்கையானது தேயிலை, இரப்பர் போன்ற பணப்பயிர்களை நம்பியிருந்தது. உலகசந்தையில் அதற்கான கேள்வி குறைந்ததும் மாற்றுப் பொருட்கள் உருவானமையும் இலங்கையைப் பாதித்தது. பின்னர் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கையர் வருமானம் என இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் துறைகள் தொடர்ச்சியாக மாறிவருகின்றன.*

*திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக விவசாய நாடாக இருந்த இலங்கையில் இன்று சேவைத்துறை அதிகரித்துள்ளது. இலங்கை இன்றும் அரிசியை இறக்குமதி செய்கிறது. இதன் விளைவால் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே பிற நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.*

> இலங்கையில் விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதை உலக வங்கி எதிர்க்கிறது. மேற்குலகின் நுகர்வுப் பண்டங்களைக் கொட்டுவதற்கு மூன்றாம் உலக நாடுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெறுவதற்காக நாட்டில் வழங்கிவந்த மானியங்களைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்வதில் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் முன் நின்றன. இன்றைய அரசாங்கமும் அதனையே தொடர்கிறது.

*போருக்கு பிந்திய பொருளாதார வளர்ச்சியானது சராசரியாக 7% என அரசாங்கத்தால் கூறப்பட்டாலும் இவை இலங்கைப் பொருளாதாரத்தின் உண்மையான நிலையைப் பிரதிபலிக்கவில்லை. 2011ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின் படி இலங்கையில் 45% மக்கள் வறுமைக் கோட்டுக் கீழே இருக்கிறார்கள். 45% செல்வம் இலங்கையில் உள்ள 2% மக்களுக்கு உரியதாகிறது.*

*சமமற்ற முறையில் செல்வம் பங்கிடப்பட்டுள்ள நாடுகளின் வரிசையில் இலங்கை 27வது இடத்தைப் பிடித்துள்ளது. அண்டை நாடான இந்தியாவுக்கு 71வது இடமே கிடைத்துள்ளது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி நல்ல நிலையில் உள்ளது என்று சர்வதேச நாணய நிதியமும் இலங்கை அரசாங்கமும் சொல்லிக் கொண்டாலும் நிலைமை மோசமாகவே உள்ளது.*

**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

ஐரோப்பிய வாழ்வியல்: ஓர் அனுபவப் பகிர்வு

ஏ.ஜி.யோகராஜா | 01-11-2012



ஒக்டோபர் புரட்சி

*போல்ஷெவிக் புரட்சி (Bolshevik revolution) எனவும் அறியப்படும் ஒக்டோபர் புரட்சி (October revolution), 1917 ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சியின் இரண்டாம் கட்டமாகும்.*

*முதலாவது 1917 பெப்ரவரியில் நிகழ்ந்தது. நவம்பர் 7, 1917 (பழைய ஜூலியன் நாட்காட்டியின்படி 1917 ஒக்டோபர் 25) இல் நிகழ்ந்த ஒக்டோபர் புரட்சி, விளாடிமீர் லெனின், மற்றும் லியோன் ட்ரொட்ஸ்கி ஆகியோர் தலைமையில் போல்ஷெவிக்குகளால் நடத்தப்பட்டது. இது கார்ல் மார்க்ஸின் கருத்துக்களின் அடிப்படையில், இருபதாம் நூற்றாண்டில் இடம்பெற்ற முதலாவது பொதுவுடைமைப் புரட்சியாகும். இந்தப் புரட்சி, ரஷ்ய இடைக்கால அரசாங்கத்தை வீழ்த்தியது. இதன் பின்னர் 1918 தொடக்கம் 1920 வரை இடம்பெற்ற உள்நாட்டுக் கலகங்களைத் தொடர்ந்து, 1922 இல் சோவியத் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. காலப்போக்கில் ஒக்டோபர் புரட்சி பெரும் உலகளாவிய முக்கியத்துவம் உடைய நிகழ்வாகக் கருதப்பட்டது.*

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## சமகால இலங்கையின் பொருளாதார வளர்ச்சி

முன்பக்கத் தொடர்ச்சி..

இன்று சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் சரணடைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியம் நீண்டகால வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குவதில்லை. அந்நியச் செலாவணி நெருக்கடியிலிருந்தும் கொடுப்பனவு மிகுதி நெருக்கடியிலிருந்தும் மீட்சி பெறுவதற்கே சர்வதேச நாணய நிதியம் நிதி வழங்குகிறது. இந்த நிதி வழங்கலானது நிபந்தகைளுக்கு உட்பட்டது. இன்று இலங்கையின் சகல அலுவல்களும் சர்வதேச நாணய நிதியத்தாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

இன்றும் விவசாயத் துறையிலேயே நாட்டின் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் தங்கி வாழ்கின்றனர். ஆனால் விவசாயத் துறை கவனிப்பாரற்ற நிலையில் உள்ளமையால் தேங்காய், கோழி இறைச்சி, கோழிமுட்டை, வெங்காயம், மிளகாய் மற்றும் உப உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியதன் விளைவசால், ஆரம்பத்தில், இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பண்டங்கள் உள்நாட்டில் உற்பத்தியான பண்டங்களை விட மலிவாகக் கிடைத்ததால் மக்கள் நீண்டகால விளைவுகள் பற்றிச் சிந்திக்காது உடனடி மகிழ்ச்சி கொண்டனர். அத்துடன் உள்நாட்டு உற்பத்தியாளர் தமது உற்பத்திகளைக் கைவிட நேர்ந்தது. உள்நாட்டு உற்பத்திகள் கிட்டத்தட்ட முடிவுக்குவந்த நிலையில் இறக்குமதி வர்த்தகம் ஏகபோகமானதுடன் விலைகளும் அதிகரித்தன. இவை இன்று நாம் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கான அடிப்படையாகும்.

இலங்கையில் விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதை உலக வங்கி எதிர்க்கிறது. மேற்குலகின் நுகர்வுப் பண்டங்களைக் கொட்டுவதற்கு மூன்றாம் உலக நாடுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெறுவதற்காக நாட்டில் வழங்கிவந்த மானியங்களைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்வதில் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் முன் நின்றன. இன்றைய அரசாங்கமும் அதனையே தொடர்கிறது.

இப்போது அரசு தற்காலிகத் தீர்வாக எதற்கெடுத்தாலும் இறக்குமதியென்ற தாரக மந்திரத்தை ஓதுகிறது. இறக்குமதிக்கு அந்நியச் செலவாணி தேவை. அதுமட்டுமல்லாமல் இறக்குமதி என்றதும் அமைச்சர்கள் முதல் இடைத் தரகர்களும் பல்வகைப்பட்ட பிரமுகர்களும் வரை இலாபமடைகின்றனர். இதன் மூலம் பாதிக்கப்படுவது நுகர்வோரான மக்களே. இன்று நாட்டின் உற்பத்தித் துறைகளும் விவசாய சிறுகைத்தொழில்களும் திறந்த பொருளாதாரத்தால் விழுங்கப்பட்டுள்ளன. அதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் முன் நிற்கின்றன. அதனை அரசாங்கமும் அரவணைத்து நிற்கிறது.

1977ல் ஜே.ஆர். தொடக்கி வைத்த தாராளமயம், தனியார்மயம் மற்றும் திறந்த சந்தை என்ற நவதாராளப் பொருளாதாரத்திற்குள்ளும் அதற்கு வழிகாட்டி பாதுகாப்பு வழங்கிவரும் ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கும் மகிந்த சிந்தனை மூலம் வலுச் சேர்க்கப்பட்டு வருகின்றது. நாட்டு வளங்கள் யாவும் அந்நிய பல்தேசியக் கம்பனிகளுக்கும் உள் நாட்டுப் பெரு முதலாளிகளுக்கும் தாரைவார்க்கப்பட்டு வருகிறது. இவற்றால் அற்ப சொற்பமாகவே இருந்துவந்த தேசிய பொருளாதாரம் என்பது அடிச் சுவடே இல்லாமல் அழிக்கப்பட்டு விட்டது. அதனாலேயே சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் இன்றைய அரசாங்கத்திற்குத் தொடர்ந்து கடனும் ஆலோசனைகளும் வழங்கி நிற்கின்றன.

அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரத்தைப் புரிந்து கொள்வதற்கு இலங்கையின் நிலவுடமை உற்பத்தி உறவுகளைப் புரிந்து கொள்ளல் அவசியம். சமூகத்தில் நிலவுடைமை அடிப்படையிலான உற்பத்தியோ உற்பத்தி உறவுகளோ இல்லை என்பது தெளிவு. அதனாலேயே 1970கள் வரை பயன்படுத்தி வந்த "அரைக் கொலனிய அரை நிலப் பிரபுத்துவ" என்ற அடையாளப்படுத்தலை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. இன்று கொலனியம் நவகொலனியமாகத் தன்னை முற்றாக மீள வடிவமைத்துள்ளது. பழைய வகையான கொலனியாட்சி முறையை ஏகாதிபத்தியத்தால் தொடர இயலாது. எனவே உலகமயமாதல் மூலம் நவகொலனியத்தை அது வலுப்படுத்தியுள்ளது. 1978ல் இலங்கையில் அறிமுகமான புதிய திறந்த பொருளாதார கொள்கை நவகொலனியத்தை வேகப்படுத்தியது. அதன் தொடர்ச்சியாக முதலில் அந்நியக் கம்பனிகள் பெருந்தோட்டங்களைத் தமதாக்கின. இப்போது நாட்டின் பல்வேறு இடங்களில் அந்நியக் கம்பனிகள் பிற விவசாய ஏற்றுமதிகட்காகப் பயிர்ச்செய்கை நிலங்களைத் தமதாக்கி வருகின்றன.

இன்று எமது பொருளாதாரத்தைக் காப்பாற்ற வேண்டுமாயின் நிலவுடைமையின் எச்சங்கள் சமுதாய மேற்கட்டுமானத்தில் நிலவுவதன் பயனாகச், சமூக மாற்றத்திற்கு எதிரான சக்திகள் வலுவடைகின்றன. எனவே நிலவுடைமையின் எச்சங்களைப் பண்பாட்டுத் தளத்திலும் சிந்தனைத் தளத்திலும் எதிர்த்துப் போராடுவது தேவையாகிறது.

### ஐரோப்பிய வாழ்வியல்: ஓர் அனுபவப் பகிர்வு

**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )**

[உரை : ஏ.ஜி.யோகராஜா (யோகா மாஸ்டர்) :

1960, 70களில் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டு வந்தவர். ஜரோப்பாவில் மனிதம், ஒன்றியம் போன்ற சிற்றிதழ்களை வெளிக் கொண்டுவந்தவர். ஓர் அரங்க, மாற்றுச் சினிமாச் செயற்பாட்டாளர். அரசியல், கலை, இலக்கியம், பண்பாடு போன்ற விடயங்கள் சார்ந்து செயற்பட்டும் எழுதியும் வருபவர். ]

1. ஜரோப்பா ஓர் உயர் முதலாளித்துவத்தின் அடையாளமா?
2. ஜரோப்பியச் சமூகத்தில் ஜனநாயகமும் பண்பாடும்.
3. ஜரோப்பாவில் மார்க்சிசம் தோற்றுவிட்டதா? சோசலிசம் நிலவுமா?
4. ஜரோப்பியத் தமிழர்கள்.
5. ஜரோப்பிய விழுமியங்கள், கஷ்டங்கள், சமூகநலத் திட்டங்கள்.



சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA